செ.வெ.எண்:66 நாள்:28.11.2017

# பத்திரிக்கைச் செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூலங்கள் மூலம் ஓய்வூதியம் பெறும் 31.12.2015 க்கு முன்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு 7வது சம்பளக்குழு அறிக்கையின்படி ஓய்வூதியம் திருத்தியமைக்கப்பட்டு அதனடிப்படையில் அக்டோபர்.2017 க்கான நிலுவைத் தொகை மற்றும் நவம்பர்.2017 க்கான ஓய்வூதியம் பெறத் தக்க வகையில் அவற்றிற்கான பட்டியல்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

நவம்பர்.30ம் தேதியன்று இதற்கான ஓய்வூதியத் தொகை ஓய்வூதியர்கள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

மேலும் கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகைக்கு விழா முன்பணம் வேண்டியவர்களுக்கு பண்டிகை முன்பணம் நவம்பர்.2017 ஓய்வூதியத்துடன் சேர்த்து அனுப்பப்பட்டுவிட்டது.

வருமான வரி செலுத்தும் நிலையிலுள்ள ஓய்வூதியர்கள் தங்களது உத்தேச வருமான வரி கணக்கீடு சார்பான விபரங்களை அவரவர் ஓய்வூதியம் பெற்று வரும் கருவூல அலுவலகங்களுக்கு டிசம்பர் 15ம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என மாவட்டக் கருவூல அலுவலர் திரு இரா. அருணாசல சுந்தரம் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.